# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

ஏப்ரல் 2013 ❁ விலை ரூ. 15/-



சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

மனிதர்களாகப் பிறந்த நாம் நம் வாழ்க்கையில் பலவகையான இன்பங்களிலும், துன்பங்களிலும் சுழன்று கொண்டே இருக்கின்றோம். சில வகைத் துன்பங்களிலிருந்து மீண்டு வருவதற்கு ஞானிகள் நமக்கு வழிவகை செய்திருக்கின்றார்கள். நமது தமிழ்த் தெய்வமான முருகனின் மீது புகழ் பாடிப் பறைசாற்றியவர் அருணகிரி நாதர் அவர்கள், அதனால் அவர் இயற்றிய பாடல்களை நாம் திருப்புகழ் என்று கூறுகிறோம். தேவாரம் என்று சொன்னால் அது மூவர் இயற்றிய பாடல்களையே குறிக்கும். திருவாசகம் என்று கூறினால் மணிவாசகரின் அருள் வாக்கு ஆகும். திருமந்திரம் என்பது திருமூலர் திருமறையை உணர்த்துதல் என்பது ஆகும். அதுபோல இந்த பாரத புண்ணிய பூமியில் அவதரித்த மகான்கள் பலர் இருந்தாலும், முருகன் ஒருவனையே ஏக தெய்வமாக வழிபட்டு, பெறுவதற்கு அரிய நூல்களான 6666 மகா மந்திரங்களை நாம் ஓதிப் பயனடைய வேண்டும் என்றும், ஏக தெய்வ வழிபாடு மிகச் சிறந்தது எனவும் கூறிய முனிவர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் ஒருவரே ஆவார்.

**முன்னுரை:-**

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்த ஞானபானு ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், செவ்வேட் பரமன் ஒருவனையே வழிபடும் உறுதியான கொள்கை உடையவர். அப்பெருமானைப் புகழ்ந்து 6666 திருப்பாடல்கள் பாடியருளினார். அவற்றை ஆறு மண்டலங்களாக வகுத்தார். அவற்றுள் முதல் மண்டலத்தில் **குந்துகால்** திருப்பதிகம் அமைந்துள்ளது. இதில் ஐந்து திருப்பாடல்கள் உள்ளன. மூன்று வகையான சந்தங்களில் பாடியருளியுள்ளார்.



சுவாமிகளின் பிள்ளைத்திருப்பெயர் "அப்பாவு" என்பதாகும். இவருக்குத் தமிழ் கற்றுத் தந்த தமிழாசிரியர் முனியாண்டியாப்பிள்ளை அவர்கள் குந்துகாலில் உள்ள முனீசுவரரை வணங்கி வந்தவர். அப்பாவு பாடல்கள் புனையும் ஆற்றலை அறிந்து கொண்ட ஆசிரியர், அவரிடம் முனீசுரரைப் பற்றிப் பாடல் புனையும்படி கூறினார். "ஐயா! நான் முருகனைத்தான் பாடுவேன்" என்றார், "முனியை முருகு என்றே பாடுதி" என்றார் ஆசிரியர். அவர் விருப்பத்தை நிறைவேற்றுதற் பொருட்டு அவர் உள்ளம் கழிபேருவகை கொள்ளுமாறு அப்பாவு பாடியருளினார். அப்போது அவருக்கு வயது பதினான்கிற்குட்பட்டதாக இருந்திருக்கலாம்.

இப்பாடல்களைக் கேட்ட குந்துகால் மக்கள் அதிசயித்தார்கள். இப்பாடல்களில் சந்தமும், சொல் நயமும், பொருள் நயமும் பக்திச் சுவையும் முனீசுரர் பெருமையும், முருகனின் முதன்மையும், குந்துகால் மக்களின் பத்தியும், இயற்கை வருணனையும் அற்புதமாக அமைந்து, உணர்வுடன் பாடுவோரைப் பரவசப்படுத்தும் இயல்பின. ஒவ்வொரு பாடலிலும், முனியை முருகென்றே தொழுதால் சஞ்சலம் அகன்று போகும், துயர் பறந்துபோகும், குறை கடுகி ஓடியிடுமே, துன்பு போகும், தப்பாது துன்பற்று வாழ்வர் எனப் பயன் கூறியுள்ளார். ஒவ்வொரு நாளும் இப்பதிகத்தைப் பக்தியுணர்வுடன் ஓதிவருபவர்களின் துன்பம் மலையளவாக இருந்தாலும் பறந்து போய்விடும் என்பது உறுதி. இதனை ஓதித் துயரத்தை நீக்கி நன்மை பெற்று நாமும் உய்வோமாக.

**பாடல்களும் விளக்கங்களும்:-**

**குந்துகால்**

**தந்தனன தந்தனன தந்தனன தந்தனன**
**தந்தனன தந்தனன**

**அம்பு உதம் நிறைந்து விரி வெண்திரை உலம்பு விழு**
**மம் பெருகு குந்துகாலில்**
**அந்தணர் விரும்பு மலர் தந்திடு மலம்பல**
**அடர்ந்த வளம் பொயாத**

மந்திர, தந்திர, பில்லி,
சூனியம், மற்றும் ஏவல்
ஆகிய துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமா?

**பம்பரம் உறழ்ந்து அவிர் குரும்பைகள் தரும் சிறு**
**பசுந்தழை செறிந்த கேளி**
**பம்பி நிழல் தந்திட அமைந்த தளியின் கணை**
**படும் சடை நிலம் துழாவச்**
**செம்பு நிற அம்பரம் அணிந்து கரம் ஒன்றில் ஒரு**
**தெண்டு அது விளங்க வாசச்**
**செங்கழலில் ஒண்குறடு இலங்க அளி அன்பர்கள்**
**தினம் தினம் இறைஞ்சி வாழச்**
**சம்ப்ரமம் உடன் திகழ் அருந்தவன் இரும் பரம**
**சங்கரி பயந்த சூர**
**சண்டன் முருகன் குமரன் என்று தொழுகின்றவர்கள்**
**சஞ்சலம் அகன்று போகும்.**

**விளக்கம்:-**

பல வகையான சங்குகளைத் தருகின்ற நீரானது நிறைந்து பரந்த வெண்மையான அலைகள் வீசி முழங்கும் சிறப்பு மிகுகின்ற குந்துகால் என்னும் திருத்தலத்தில், ஈசர் விரும்பி ஏற்கும் நறுமலர்களைத் தருகின்ற பலவகையான மரங்கள் நெருங்கியிருக்க, வளம் என்றும் குறையாதிருக்கும் சிறுவர்களின் விளையாடு கருவியான பம்பரம் போல் விளங்கும் இளநீர்க் காய்கள் தருகின்றவையும், சிறிய பசுமையான ஓலைகள் நெருங்கியுள்ளவையுமான தென்னை மரங்கள் பரவியிருந்து குளிர்ந்த நிழலைத் தரும்படியாக நடுவில் திருக்கோயில் அமைந்திருக்கும். அங்கு திரட்சியுடைய நீண்ட சடைகள் பூமியைத் தடவச் செம்பு போன்ற நிறமுடைய ஆடையை அரையில் உடுத்தி ஒரு கையில் தண்டாயுதம் ஒன்றைப் பிடித்தவாறு, மணம் கமழும் திருவடிகளில் அழகிய பாதக் குறடு விளங்க, அடியார்கள் நாள்தோறும் தொழுது வாழும் படி அருந்தவமுடைய முனீசுரர் எழுந்தருளியுள்ளார். இவரை மிக மேலான சங்கரியம்மை பெற்ற, சூரசண்டன், முருகன், குமரன் என்று நினைத்து வணங்கும் அடியார்களின் எல்லாவகையான துன்பங்களும் விலகிப் போகும். (1)

**தன்னத்த தத்ததன தன்னத்த தத்ததன**
**தன்னத்த தத்ததன**

**கம்மல் சிமிக்கி மிலை மென்மெய்ப் பரத்தையர்கள்**
**கண்மைக்கு அகன்று மோக**
**கன்மப் பவக் கவையை உண்மைப் பதத்து இறைமை**
**கண்ணிச் சிறந்த வீர**
**அம்மைக் கடுத்தலையில் உன்னித் தறிக்கும் உரம்**
**அண்ணிக் கடிந்து அறாத**
**அந்திற்க மெய்ப்பரம நன்மைப் பயிர் செயும்**
**நலன் மக்கள் வந்து சேரும்**
**செம்மைச் சிவப்பு இதழி மென்முள் கடுக்கை புனை**
**தென் மொய்த்த குந்துகாலில்**
**சின்முத்திரைக் கரம் உடன் மத்தகச் சடை**
**நிலன் முட்ட நின்ற தேவை**
**இம்மைக்கண் உற்று இறுதியில் முற்று அளிக்கும் இறை**
**எம்மைக்கொள் அந்த காரி**
**இன்மைத் துனிக்கும் முருகு என்னத் துதிப்பர் துயர்**
**எண்ணிப் பறந்து போகும்**

மென்மையான உடம்புடைய விலைமாதர் தம் காதுகளில், கம்மல், சிமிக்கி முதலிய காதணிகளை அணிந்து கண்களுக்கு மைதீட்டிக் காமுகர்களைக் கவர்வார்கள். குந்துகாலில், மைதீட்டிய இவர்களின் கண்வலைகளில் அகப்படாமல் வந்துகூடும் நன்மக்களே உள்ளனர். அவர்களுடைய காமத்தை வென்ற அரிய குணத்தையறிந்து, மோகமும் வினையும் என்னும் பிறப்புக்குக் காரணமான மயக்கத்தைத் தம் மெய்யான திருவடி ஆட்சியினால் திருவுளத்தில் கருதி, மேலான வீரமுடைய தேவியானவர் தம் ஞான வாளினால் பாய்ந்து வெட்டுவார். அந்த அம்மையின் அருள் ஞானம் என்றும் விட்டு நீங்காதவாறிருத்தற்பொருட்டுத் தாம் விடுத்த காமத்தைத் தலையெடுக்க ஒட்டாது. மெய்ம்மையும் மேன்மையும் ஆன புண்ணியப் பயிர்களை வளர்க்கும் நற்குணமுள்ள மக்கள் வந்து கூடும் திருத்தலம் குந்துகால் ஆகும்.

செவ்வையான சிறப்பு நிற மலர்கள் பூக்கும் மென்மையான முட்களுடைய கொன்றை மரங்களும், புன்னை மரங்களும், தென்னை மரங்களும் அடர்ந்துள்ள குந்துகாலில், ஞான முத்திரை காட்டும் திருக்கையுடனும், தலையிலுள்ள சடைகள் நீண்டு வளர்ந்து நிலத்தைத் தொடவுமாக, நின்ற திருக்கோலத்தில் முனீசுரர் உள்ளார். இம்முனீசுரரை, இம்மண்ணுலகிற்கு வந்து அழிவில்லாத முத்தியை அளித்தருளும் சிவபெருமானுடைய தேவியின் புதல்வனான முருகன் என்று நினைத்துத் துதிக்கும் அடியார்களின் துயரம், முருகன் அருள்பெற்ற இவர்களிடம் நாம் நிலை பெற இனி முடியாது என்று நினைத்துப் பறந்து விடும்.

மைக்கண் விலைமாதர்களின் கண்வலையில் அகப்படாதவர் காமத்தை வென்ற மேன்மக்களாவர். எதை வென்றாலும் வெல்லலாம், காமத்தை வெல்லல் அரிது; அதனை வென்றுவிட்டால், தான் தேடிய பொருளில் அதிக விருப்பம் கொள்ளுதல் என்னும் பொருள்படும் மோகத்தையும், அதனால் வளர்ந்து கொண்டே இருக்கும் வினையையும், அனுக்கிரக சத்தியின் ஞானத்தால் ஒழிக்கலாம். இந்த மோகமும் கன்மமும் மரக்கவைபோல் (ஒரு கொம்பில் இரு கிளைபோல்) இருந்து பிறப்பைத் தருவனவாகையால், இரண்டையும் ஒருசேர ஞானவாளால் மேலான வீரமுடைய அம்மை பாய்ந்து வெட்டுவார். அருள்சத்தியான அம்மை விரைந்து அருள் புரிவதை இவ்வாறு குறிப்பிட்டார். இந்த நன்மக்கள் காமம் தலையிடாது என்றும் ஞானநெறியில் நிற்க விரும்பிப் புண்ணியங்களை விடாது செய்து வருவார். உண்மைச் சிவபுண்ணியம் செய்துவரும் போது அவர்கள், முத்தியை நோக்கிச் செல்லும் பயணத்தில் இறைவன் தானே இம்மண்ணுலகிற்கு வந்து, ஞான குருவாய் நின்று, ஞானத்தை உபதேசித்து, முத்திபெற அருள் புரிவான். (2)

தனதனன தானதன தனதனன தானதன
தனதனன தானதனனா

அமரர்களை ஏவல் கொள்ள அதிவலிமை சால் நிருதர்
அர ஓர் கணை ஏவும் விறலோன்
அனலி இன மீளி தவ வியன் மருவு இராகவனது
அணை எனும் ஓர் சேது இடையே
விமல விரை மாமலர்கள் அவிழும் அடர் கா நிறையும்
விரதர் குவிகாலின் அரி தீர்
விசதம் மலி நீறு உருவம் முழுது நனி தோய எழில்
விளை விரத வேடம் ஒடு வாழ்
சுமவதன மாமுனியை அரிமருக வேல் முருக
சுரர் நரர்கள் மாதவர்கள் தாம்
தொழ மிளிறு நீல ஞமலியில் ஐவரும் ஈச அறு
சுடரும் ஒரு சோதி வடிவாக்
குமரகுரு தாசன் நிதம் வழிபடு சுரேச சிவ
குருபர சுவாமி எனவே
குணமொடு சதா நணுகி அடிபரவு மானுடர்கள்
குறை கடுகி ஓடியிடுமே.

தேவர்களை ஏவல் செய்வதற்கு ஏற்ற மிகுதியான வலிமை பொருந்திய அசுரர்கள் ஒழிய ஓர் அம்பினைச் செலுத்திய வீரனும், சூரியகுலத்துத் தோன்றிய அரசனும், மிகுந்த பெருமையுடையவனும் ஆன இராமனது அணை என்று கூறப்படும் சேதுவில், குற்றமற்ற மணம் பொருந்திய சிறந்த மலர்கள் மலர்கின்ற சோலைகள் நிறைந்திருப்பதும், தவத்தோர் திரளாக வந்து கூடுவதுமான தலம் குந்துகால். இக்குந்துகாலில் குற்றமற்ற வெண்மை நிறமுடைய திருநீறு தம் திருமேனி முழுதும் தோய்ந்திருக்க, அழகைத் தோற்றுவிக்கும் தவவேடத்துடன் வாழுகின்ற, தாமரை மலர் போலும் திருமுகம் உடைய சிறந்த முனீசுரர் எழுந்தருளியிருப்பார். இம் முனீசுரரைத் திருமால் மருமகனே! வேற்படை ஏந்திய முருகனே! தேவர்கள், மனிதர்கள், பெருந்தவசிகள், அனைவரும் வணங்க ஒளி வீசும் நீல மயில்வாகனத்தின் மேல் ஏறிவரும் ஈசனே! ஆறுதீப்பொறிகளும் ஓர் ஒளி உருவமாகக் குமர குருதாசன் நாள்தோறும் பூசிக்கின்ற தேவர்கள் அரசனே! சிவகுருபரனே! சுவாமியே! என்று நினைத்துச் சத்துவகுணத்துடன் எப்போதும் அணுகித் திருவடிகளைத் துதிக்கும் மனிதர்களின் குறைகள் எல்லாம் விரைந்து ஓடியே போய்விடும். (3)

தனதாந்த தந்தனா தனதாந்த தந்தனா
தனதாந்த தந்ததான

முடிபூண்ட மண்டலி கரும் மாண் தொழும்பர் ஊன்
முடை மாந்துகின்ற பேயின்
முகையாம் கணங்களோடு அருள் மாந்து அரும்பையார்
முனியாண்டியும் பனாளும்
அடியாம் பதங்களே தொழ ஊங்கு அலர்ந்த பூ
அணிவேய்ந்து இலங்குவேணி
அதுதான் துலங்கவே அணி சான்ற செங்கை மீது
அடல் சேர்ந்த தண்டம் ஒடு
வடிவு ஏய்ந்த வண்டு பாடு அடர் பூங்கடம் சதா
வளர் பாம்பன் என்ற தீவுள்
மடல் நீண்ட கந்த கேதகை ஈந்து சம்புமா
மணல் ஓங்கு குந்துகாலில்
குடி ஆண்டு அமர்ந்த தேவனை ஆம்பல் அந்தண் ஆர்
குழை நான்ற கொன்றை சூடும்
குழகு ஆர்ந்த ஒண்கணாள் பொருள் சேந்தன் என்று உளே
கொளும் மாண்பர் துன்பு போகும்.

முடியணிந்த அரசர்களும், மாட்சிமையுடைய அடியார்களும், கெட்ட மனமுடைய புலாலை உண்ணும் கூட்டமான தீய கணங்களும், அருள் பெற்ற மனிதர்களும், அழகு நிறைந்த முனியாண்டியாபிள்ளை அவர்களும் பல நாளும் திருவடிகாண திருப்பாதங்களையே வணங்கும்படியாக முனீசுரர் எழுந்தருளியுள்ளார். அதிகமாக மலர்களினால் ஆகிய மாலைகள் சூட்டப்பெற்று விளங்கும் சடைகள் திகழ, அழகு பொருந்திய சிவந்த திருக்கையில் வலிமை பொருந்திய தண்டாயுதத்துடன், அழகு பொருந்திய வண்டுகள் பாடும் நெருக்கமான மலர்க் காடானது எப்போதும் வளரும் பாம்பன் என்னும் பெயருடைய தீவினுள் நீண்ட இதழ்களுடைய மணல் மேடுகளும் உயர்ந்து விளங்கும் குந்துகால் என்னும் திருத்தலத்தில் குடிமக்களைக் காத்தவண்ணம் எழுந்தருளியிருக்கும் முனீசுரரை, யானைத் தோலைப் போர்த்துக் கொண்டு அழகிய குளிர்ச்சி பொருந்திய தளிர்கள் தொங்கும் கொன்றை மலரை அணியும் இளமை பொருந்திய அழகிய கண்களுடைய உமாதேவியின் செல்வமான சேந்தன் என்று, மனத்துள்ளே தியானிக்கும் மாட்சிமையுடைய அடியார்களின் துன்பங்கள் விலகிப் போகும். (4)

தத்தான தந்தத்த தத்தான தந்தத்த
தத்தான தந்தந்தனா

உப்பு ஏறு சிந்துத் திரைத் தூவல் விஞ்சிப் பொன்
ஒப்பாய் மலிந்து எங்குமா
ஒப்பு ஏறு மண் திட்டு உறச் சேது அரங்கிற்கு
அண் உள்கா இரும் குந்துகால்
எப்போதும் நன்கு உற்றிடக் காவல் கொண்டு அத்த
எஃகோடு இயங்கும் பிரான்
எட்டு ஏறு பந்தக் குழுப் பாற அன்பர்க்குள்
எக்காலமும் தங்குவோன்
அப்பாவு சந்தத்தில் இப்பா விளம்பிகொள்
அத்தா எனும் கந்தவேள்
அஃகாத இன்பத்து அருள் தேவன் என்று உள் கொள்
அச்சோடு இறைஞ்சு அன்புளோர்
தப்பாது துன்பு அற்று இமிழ்ப்பா இனம் சொற்ற
தக்கோன் உரம் கண்டு அரோ
சற்போத சம்பத்து மெய்ப்போகமும் பெற்றார்
சத்தாவர் இங்கு அங்குமே.

உப்பு அமைந்த கடலின் அலைகளிலிருந்து தெறிக்கும் நீர்த்துளிகள் மிருந்திருக்கும், எல்லாவிடத்திலும் பொன்போன்ற நிறமுடைய உயர்ந்த மண்மேடுகள் மிகுதியாகவிருக்கும். இவ்வாறு விளங்கும் சேது என்னும் திருவணைக்கு மிக அருகில், சோலைகள் சூழ்ந்த இடத்தில், குந்துகால் என்னும் திருத்தலம் உள்ளது. இங்குக் குடிமக்களின் நன்மையின் பொருட்டுத் தம் திருக்கையில் தண்டாயுதத்தைப் பிடித்துக் காவல்புரிதலை மேற்கொண்டு செயல்புரியும் முனீசுரர் எழுந்தருளியுள்ளார்.

இம் முனீசுரரையே, ஆசைகளை மிகுவிக்கும் பற்றாகிய கூட்டம் நலிய அன்பர்கள் மனத்துள் எக்காலமும் தங்கியருள்பவனும், “அப்பாவு! இந்த சந்தத்தில் பாடுக! நான் அதனை விரும்பி ஏற்பேன்” எனக் கட்டளை இட்டவனும், பேரின்ப வடிவமாகவும் பேரருள் வடிவமாகவும் விளங்குபவனும் ஆன கந்தவேள் என்று நினைத்து, மனத்திற் கொள்ளும் அச்சத்துடன் வணங்கும் அன்புடையவர்கள், தவறாது துன்பங்கள் நீங்கித் திருப்புகழ்ச் சந்தப்பா பாடியருளிய தீவிரப் பக்குவமுடைய அருணகிரிநாதர் அடைந்த ஞானத்தை உணர்வர், மெய்ஞ்ஞானச் செல்வத்தால் பெறத்தக்க மெய்யான பேரின்பத்தைப் பெற்றவராய்க் குகத்துவம் பெற்று, இம் மண்ணுலகில் வாழும்வரை சீவன் முத்தராயும், அம்மேலுலகில் பரமுத்தாராயும் வாழ்வர்.

**இப் பதிகத்தின் முக்கிய நோக்கம்:-**

ஏக தெய்வ வழிபாடு மிகச் சிறந்தது. பாரதியார் இயற்றிய பாடல்கள் பல இருந்தாலும், “காக்கைச் சிறகினிலே நந்தலாலா உந்தன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா” என்ற பாடலை நாம் இங்கு நினைவு கூர்வது சாலச் சிறந்தது. முனியை முருகு என்று சுவாமிகள் பாடியருளியதற்கும் பாடலை மக்கள் கேட்டு அதிசயித்ததற்கும் குந்துகால் பதிகம் ஒரு சான்று ஆகும். "முருகப் பெருமானையே பாடு நியமம் பூண்ட சுவாமிகளுக்கு இளமையில் தமக்கு தமிழ் பயிற்றுவித்த உபாத்தியாயரராய முனியாண்டி யாபிள்ளையவர்கள் தாம் பூஜிக்கின்ற முனியையே முருகெனப் பாட வேண்டுமென்ற வேண்டுகோளுக்காக அவர் இவ்வைந்து செய்யுளையும் இளமையில் பாடி அருளினார். பொருளும், சந்தமும் சிறந்த இவ்வைந்து பாடல்களையும் கருதிய அவ்வூரிலுள்ளாருள் பலர், இந்நாடு தோன்றிய காலந்தொட்டு இக் காலங்காறும் இங்கொரு புலமையோர் இவரைப் போலத் தோன்றிலர் என்றற்கும், இளமையிலேயே ஆன்மலாபம் விரும்பி நின்றார் என்றற்கும் யாதானும் ஓராதரவில்லையாகலின் இவர் செய்கை வியக்கற்பாலதே! என்று பேசிக் கொள் வாராயினார்.”

இப்பாடலை நீங்கள் ஓசை நயத்துடன் www.pambanswamigal.org or net ஆகிய இணைய தளத்தில் கற்றுக் கொள்ளலாம். இந்தப் பாடலுக்கு மிக விரிவான விளக்க உரை எழுதியவர் சித்தாந்தச் செல்வர், பேராசிரியர், டாக்டர் ப. இராமன் அவர்கள். இக் கட்டுரையை அடியேன் எழுதுவதற்கு இவருடைய உரைதான் அடித்தளமாக அடியேனுக்கு அமைந்தது. ஆகையால் இந்தப் பெருமை டாக்டர் ப. இராமன் அவர்களையே சாரும் என்பதில் ஒரு துளி ஐயமும் இல்லை. பதிகத்தை ஓதுவோம், பில்லி ஏவல் ஓட்டுவோம், பெறற்கரிய இன்பம் பெறுவோம்.



## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

**மேலும் விவரங்களுக்கு : Email: thiruppalli@yahoo.com or 94449 58526**